வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி 09.01.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இன்று வெளிநாடு வாழ் இந்தியர் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வெளிநாடு வாழ் இந்தியர்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- சோம்நாத் கௌரவ விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாள் பயணமாக நாளை குஜராத் செல்கிறார்.
- பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி நாடு முன்னேறி வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.
- பிரதமரின் சூர்ய கர்-இலவச மின்சாரத் திட்டம் குறித்து, புதுச்சேரியில், நாளை, 3 இடங்களில், விழிப்புணர்வு முகாம்கள் நடைபெற உள்ளன.

-------------------------

<u>வெளிநாடு வாழ் இந்தியர் (9)</u>

இன்று வெளிநாடு வாழ் இந்தியர் தினத்தை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, வெளிநாடு வாழ் இந்தியர்கள் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்தியக் கலாச்சாரத்தை உலக அளவில் பரப்பும் தூதர்கள், வெளிநாடு வாழ் இந்தியர்தான் என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். எந்த நாட்டில் வாழ்ந்தாலும், வேர்களை விட்டு விடாமல், அந்நாட்டு சமூகத்தை வளப்படுத்துவதே, வெளிநாடு வாழ் இந்தியர்களின் சிறப்பு என்றும், தாயகத்துடன், வெளிநாடு வாழ்

இந்தியர்களின் நெருக்கத்தை மேலும் அதிகரிக்க, அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து இருப்பதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார்.

-------------------------

<u>மோடி சோம்நாத் 1 (19)</u>

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாள் பயணமாக நாளை குஜராத் செல்கிறார். நாளை மாலை அவர் சோம்நாத் சென்றடைந்து, சோம்நாத் கௌரவத் திருவிழாவின் ஒருபகுதியாக நடைபெற்று வரும் அகண்ட ஓங்கார ஜபத்தில் பங்கேற்கிறார். சோம்நாத் கோவிலில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாபெரும் ட்ரோன் காட்சி ஒன்றையும் அவர் பார்வையிடுகிறார். வரலாற்று காலத்தில், எதிரிகளின் அடுத்தடுத்த படையெடுப்புகளில் இருந்து, சோமநாதர் ஆலயத்தை பாதுகாப்பதற்காக உயிர்த் தியாகம் செய்த எண்ணற்ற வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், நாளை மறுநாள் நடைபெற உள்ள, சூரிய யாத்திரைப் பேரணியில் பிரதமர் கலந்து கொள்கிறார். தொடர்ந்து சோமநாதர் ஆலயத்தில் தரிசனம் செய்த பின்னர், சோம்நாத் கௌரவத் திருவிழாவில் அவர் உரையாற்ற இருக்கிறார். அன்றைய தினம் பிரதமர் ராஜ்கோட் சென்று, கட்ச் மற்றும் சௌராஷ்ட்ரா பகுதிகளுக்கான, துடிப்பான குஜராத் பிராந்திய மாநாட்டில் கலந்து கொள்கிறார். பின்னர், அகமதாபாத்தில் 2ஆம் கட்ட அகமதாபாத் மெட்ரோ திட்டத்தின் எஞ்சிய பிரிவை திறந்து வைப்பார் என்றும், அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, முதலாவது ஜோதிர்லிங்கத் தலமான சோம்நாத்தில், 4 நாள் சோம்நாத் கௌரவத் திருவிழா, இன்று 2ஆவது நாளாக தொடர்கிறது.

மோடி சோம்நாத் 2 (15)

சோம்நாத் ஆலயத்தின் பழங்கால சிறப்பை நவீன ஆன்மீக-கலாச்சார மறுமலர்ச்சி யுகத்துடன் ஒருங்கிணைக்கும் வகையிலான சோம்நாத் கௌரவத் திருவிழாவில் பங்கேற்க, இந்தியா, மற்றும், வெளிநாடுகளில் இருந்து, ஆயிரக்கணக்கிலான பக்தர்கள் வந்த வண்ணம் உள்ளனர். இவர்களையும் நாளை சோம்நாத் கோவிலுக்கு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடியையும் வரவேற்கும் வகையில், சோம்நாத் நகரின் அனைத்து முக்கிய சாலைகள், சாலை சந்திப்புகள், மற்றும், சதுக்கங்களும், வண்ணமயமான விளக்குகளால் அலங்கரிக்கப் பட்டுள்ளன. பொது இடங்கள் பலவற்றிலும், உயர்தர ஒலிபெருக்கிகள் மூலம் சாஸ்திரீய இசை மற்றும், வேத மந்திரங்கள் ஒலித்த வண்ணம் உள்ளன. விழாவின் ஒருபகுதியாக நடைபெற்று வரும் 72 மணி நேர அகண்ட ஓங்கார ஜபத்தினால், சோம்நாத் நகரம் முழுவதுமே, சிவமய சக்தியால் நிரம்பியுள்ளது. சோம்நாத் கௌரவத் திருவிழா, மதம் சார்ந்த விழாவாக மட்டுமின்றி, நாட்டின் கலாச்சார நெகிழ்வுத் தன்மை, மற்றும் கௌரவத்தை வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

--------------------------

மோடி ஜெர்மனி (9)

பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 12ஆம் தேதி அகமதாபாத்தில், ஜெர்மனி சான்சலர் திரு. ஃபிரட்ரிக் மெர்ஸ்-சை சந்திக்க இருக்கிறார். பிரதமரின் அழைப்பின் பேரில், திரு. மெர்ஸ், வரும் 12, 13 ஆகிய தேதிகளில், இந்தியாவிற்கு அதிகாரப்பூர்வ பயணம் மேற்கொள்கிறார். இந்தியாவிற்கும், ஜெர்மனிக்கும் இடையிலான உறவுகள், அண்மையில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்துள்ள நிலையில், வர்த்தகம், முதலீடுகள், தொழில்நுட்பம், கல்வி, திறன் மேம்பாடு உள்ளிட்ட துறைகளில், ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து, இரு தலைவர்களும் விவாதிக்க உள்ளனர்.

--------------------------

*ராதாகிருஷ்ணன்* (8)

மொழி என்பது தனி நபர்களுக்கு இடையிலான தகவல் தொடர்புக்கு மட்டுமின்றி, சமூகத்தின் கலை-கலாச்சாரம், மற்றும் மரபுகளை, எதிர்கால தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்வதிலும் முக்கிய பங்கு வகிப்பதாக, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இந்திய மொழிகளுக்கு இடையிலான, 3ஆவது சர்வதேச மாநாட்டில் உரையாற்றிய அவர், பழங்கால ஓலைச் சுவடிகள் முதல், இன்றைய டிஜிட்டல் திரை வரை, மொழியினால் மனித குலத்தின் முன்னேற்றத்திற்கு கிடைத்த பலன்கள் ஏராளம் என்றும் அவர் கூறினார்.

------------------------

*தகவல் ஒலிபரப்பு* (9)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் ஆகியோர், புதுடெல்லியில், பிரசார் பாரதி சார்பில் நிறுவப் பட்டுள்ள படைப்பாளிகள் பிரிவை, இன்று தொடக்கி வைத்தனர். படைப்புத் திறன்சார் பொருளாதாரத்துடன், 1 கோடி இளைஞர்களை இணைக்கும் இலக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக, நிகழ்ச்சியில் பேசுகையில் அமைச்சர் திரு. வைஷ்ணவ் கூறினார். தகவல்-ஒலிபரப்பு அமைச்சகம் இவ்வாண்டு, முழு அளவில் மறுசீரமைக்கப்படும் என்றும், பிரத்யேகமான கணிப்பொறி இயக்கு தளம் ஒன்றும், இதில் அடங்கும் என்றும், அவர் தெரிவித்தார்.

------------------------

*மின்சார வாகனம்* (13)

பாதுகாப்பு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி நாடு முன்னேறி வருவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார். இன்று உத்தரபிரதேஷ் மாநிலம் லக்னோவில், அசோக் லைலேண்ட் நிறுவனத்தின் மின்சார வாகன உற்பத்தி ஆலையை திறந்து வைத்து பேசிய அவர், முன்பு, 46 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த வருடாந்திர பாதுகாப்பு உற்பத்தி, தற்போது 15 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்து இருப்பதாக

கூறினார். இத்துறை மூலமான ஏற்றுமதியும், ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவில் இருந்து, தற்போது 25 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்து இருப்பதாகவும், 2030ஆம் ஆண்டிற்குள், இது 50 ஆயிரம் கோடி ரூபாயை தாண்டும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் தெரிவித்தார். இத்துறையில் அரசின் பல்வேறு விதிமுறைகள் எளிமையாக்கப் பட்டுள்ளதால், முதலீட்டாளர்கள், மற்றும், தொழில் நிறுவனங்களின் நம்பிக்கை அதிகரித்து இருப்பதாக அவர் மேலும் கூறினார்.

-------------------------

*புதுச்சேரி மின்துறை* (12)

பிரதமரின் சூர்ய கர்-இலவச மின்சாரத் திட்டம் குறித்தும், இத்திட்டத்தின் பலன்கள் குறித்தும், மக்களுக்கு எடுத்துக் கூறும் வகையில், புதுச்சேரியில், நாளை, 3 இடங்களில், விழிப்புணர்வு முகாம்களை நடத்த மின்துறை ஏற்பாடு செய்துள்ளது. மாநில அளவிலான, புதுப்பிக்கவல்ல எரிசக்தி முகமையுடன் இணைந்து ஏற்பாடு செய்யப் பட்டுள்ள இம்முகாம்கள், திருவள்ளுவர் நகர் சாய்பாபா திருமண மண்டபம், வடமங்கலம் கௌசல்யா மஹால், சேதராப்பட்டு ஜே.வி.எம் மஹால் ஆகிய இடங்களில் நடைபெறும். சூர்ய கர் திட்டத்தின் கீழ், வீட்டு மேற்கூரையில் சோலார் மின் உற்பத்தி வசதிகளை நிறுவ, மத்திய அரசு, கிலோவாட் திறன் அடிப்படையில் 78 ஆயிரம் ரூபாய் வரை மானியம் வழங்குவதும், இத்திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் இதுவரை, 2 ஆயிரத்து 263 பேர் பயன்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

-------------------------

*பிரகதி- மின்துறை 1 (9)*

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் குறைகளை உடனுக்குடன் களைந்து, திட்டங்கள், குறித்த நேரத்தில் நிறைவேற்றி முடிக்கப்படுவதை உறுதிப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, பிரகதி தொழில் நுட்ப வசதி,

இதுவரை, 50 கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி, புதிய மைல்கல் ஒன்றை எட்டி உள்ளது. பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட மின்துறை திட்டங்கள் குறித்து, இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் காண்போம்.....

(வாய்ஸ்)

பிரகதி- மின்துறை 2 (18)

மின்துறையில், மொத்தம் 10.53 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 237 திட்டங்களின் அமலாக்கம், பிரகதி மூலமான மறு ஆய்வுகளின் அடிப்படையில், துரிதமாக்கப் பட்டுள்ளது. இதில், 4.12 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான 53 திட்டங்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி, தாமே மறு ஆய்வு செய்து துரிதப்படுத்தி உள்ளார். பிரகதி மூலம் துரிதமாக்கப்பட்ட மின்துறை திட்டங்களில், 14 அனல் மின்சாரத் திட்டங்கள், 9 நீர் மின்சாரத் திட்டங்கள், 27 மின் வினியோகத் திட்டங்கள், மற்றும், 3 நிலக்கரி சுரங்கத் திட்டங்கள் அடங்கும். மத்திய பிரதேஷ் மாநிலத்திற்கான, கதர்வாரா சூப்பர் அனல்மின் நிலையம், ராஜஸ்தான் மாநிலத்திற்கான கேத்ரி-நரேலா மின் வினியோகத் திட்டம் ஆகியன, இதில் முக்கியமானவை. பிரகதி மூலமான மறு ஆய்வுகளை தொடர்ந்து, தாமதமான நிலையில் இருந்த 43 திட்டங்கள், ஏற்கனவே நிறைவேற்றி முடிக்கப் பட்டுள்ளன. மேலும் பல திட்டங்கள், நிறைவேற்றி முடிக்கப்படும் கட்டத்தில் உள்ளன. மின்துறை திட்டங்களில் வழக்கமாக ஏற்படும் நில ஆர்ஜிதப் பிரச்சனைகள், மற்றும், சுற்றுச் சூழல் அனுமதிப் பிரச்சனைகளுக்கு, பலமட்டக் கண்காணிப்பு மூலம் உடனுக்குடன் தீர்வு கண்டு, தாமதங்களை தடுக்க வேண்டியதன் அவசியத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

வானிலை (17)

இன்று, தென்மேற்கு வங்கக் கடல், மற்றும், நில நடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் நிலவும், ஆழந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், வடமேற்கு திசையில் மேலும் நகர்ந்து, நாளை மதியம், அல்லது, மாலை வாக்கில், வடக்கு இலங்கையின் கடலோரப் பகுதிகளை கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், கடலோர தமிகழத்தில் அநேக இடங்களிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தஞ்சை, மயிலாடுதுரை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில், கனமழைக்கும், நாகை, திருவாரூர் மாவட்டங்கள், மற்றும், காரைக்கால் பகுதியில், ஓரிரு இடங்களில் மிக கனமழைக்கும், வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. கடலோர தமிழகம், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், மணிக்கு 45 கிலோ மீட்டர் வரையிலான வேகத்தில் பலத்த தரைக் காற்று வீசக் கூடும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. தென்மேற்கு வங்கக் கடல், நில நடுக்கோட்டு இந்தியப் பெருங்கடல், மற்றும், தமிழ்நாடு-புதுச்சேரி கடலோரப் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என்றும், அறிவுறுத்தப் பட்டுள்ளது.

-------------------------

புதுச்சேரி உறுதிமொழி (4)

சாலைப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, இன்று புதுச்சேரி தலைமை செயலகத்தில், தொழிலாளர் துறைச் செயலர் திருமதி ஆர் ஸ்மிதா, ஊழியர்களுக்கு, சாலைப் பாதுகாப்பு உறுதிமொழி செய்து வைத்தார். அரசு செயலர்கள், மற்றும், அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

-------------------------